பிலவ ஆண்டு (ஐப்பசி 12 ) 2021 அக்டோபர் 29தேதி வெள்ளிக்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு
திருவாரூர் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும் அப்பொழுது
கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்
முன்னிலை: திரு.சு.பிரபாகரன்ஆணையர் மற்றும் தனி அலுவலர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள் எண் 01<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான பாதாளச்சாக்கடை கழிவுநீர் அகற்றும் வாகனம் எண்.டிஎன்.50 ப்பி 0253 01.10.2018 முதல் பழுதாகி இயங்காத நிலையில் இருந்ததனை தற்போது பழுது நீக்கம் செய்தும் தொடர் நடவடிக்கைப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி வாகனத்தினை இயக்க தற்போது 01.04.2019 முதல் 31.12.2021 வரைக்கான சாலை வரித்தொகை ரூ.69317/-ம் மற்றும் வாகனக்காப்பீட்டுத் தொகை ரூ.35100/- மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,50,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் வாகனத்திற்குண்டான சாலைவரி, காப்பீட்டுதொகை மற்றும் இதரத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2823/2021/இ1 | 275) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 02<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட விருப்பாட்சிநடப்பு முதல் கேக்கரை ரயில்வே கேட்வரை மற்றும் புதிய /பழைய பேருந்து நிலைய அணுகுசாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளதனை தற்காலிக பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு நகர் மன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதனை தொடர்ந்து 12.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு.<br><table><tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர்களின் விபரம்</td><td>மதிப்பீட்டுத் தொகை ரூ.</td><td>மதிப்பீட்டு விலை விகிதம்</td></tr><tr><td>1.</td><td>திருமதி.ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர்.</td><td rowspan="2">ரூ.311392/-</td><td>0.29% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு</td></tr><tr><td>2.</td><td>திரு.எஸ்.செந்தில்குமார் , ஒப்பந்ததாரர், திருவாரூர்.</td><td>0.47% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்.</td></tr></table>மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அளித்துள்ள திருமதி.ஆர்.பரிமளா ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் துறைந்த ஒப்பந்தப்புள்ளியினை எற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதனை ஏற்கலாம்.<br>3. பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் பணியினை மேற்கொள்ள தனி அலுவலரின முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4708/2019/இ1 | 276) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 03<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மடப்புரம் ஓடம் போக்கியாற்றில் பழுதடைந்த நிலையில் உள்ள நடைபாலத்தின் வழியே திருவாரூர் தியாகராஜசுவாமி திருக்கோவில், ஸ்ரீ குரு தெட்சிணாமூர்த்தி சுவாமிகள் மடம், | 277) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| நகராட்சி அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், மாவட்ட சித்த மருத்துவமனை, பள்ளி மற்றும் பல தனியார் மருத்துவமனைகளுக்கு பொது மக்கள் தினந்தோறும் சென்று வருகின்றனர். மேலும் இப்பாலமானது தேசிய நெடுஞ்சாலை எண்.67ல் இருந்து பிரிந்து ஓடம்போக்கியாற்றின் நடைபாலமாக சென்று நகராட்சி சாலை(பெருமாள் மேல வீதி) மாநில நெடுஞ்சாலை எண்.65ல் இணைவதால் அதனை இடைவழிதட பாலமாக நெடுஞ்சாலைத்துறை மூலம் கட்டுவதற்கு திருவாரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் இடைவழிதட பாலமாக கட்டிட நகராட்சி மூலம் தீர்மானம் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் பொருள் தொடர்பாக உரிய அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நடைபாலத்தினை இடைவழிதட பாலமாக நெடுஞ்சாலைத்துறை மூலம் மாற்றம் செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. நகராட்சி குடிநீர் மெயின் குழாய்க்கு சேதம் இல்லாமல் பணி மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3092/2021/இ1 | |
| பொருள் எண் 04<br>திருவாரூர் நகராட்சியில் தார்சாலைகள் 79.580 கி.மீ சிமெண்ட்தளம் 17.224 கி.மீ மற்றும் மண்சாலைகள் 4.744 கி.மீ ஆகமொத்தம் 101.548 கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி பகுதிகளால் பாதாளச்சாக்கடை இணைப்பு குடிநீர் குழாய் பழுதுநீக்கம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. மேலும் பொது மக்களிடமிருந்து சாலைகளை செப்பணிட்டு தருமாறு புகார்கள் எழுந்தவண்ணம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலனை கருதி தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2021-22ன் கீழ் தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு ரூ.1000.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நிர்வாக அனுமதி பெறவும், மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையினை நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில்கொண்ட முழுமானியமாக பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 278) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| வார்டு எண் | பணிகளின் விவரம் (தார்/சிமெண்ட் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகள்) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 2 | வ.ஊ.சி தெரு | 0.385 | 4.20 | 36.00 |
| | கமலாம்பாள் நகர் | 0.475 | 4.20 | 39.30 |
| | சுவாமிமட தெரு | 0.230 | 4.20 | 21.80 |
| | காமாட்சி அம்மன் கோவில் (மேல்வுரம், தென்புரம்) | 0.127 | 4.00 | 11.10 |
| 4 | ஸ்ரீ தேவி நகர் | 0.158 | 4.00 | 13.90 |
| | வி.எஸ்.ஆர் நகர் | 0.171 | 4.00 | 15.00 |
| | சம்மந்தமூர்த்தி பிள்ளையார் கோவில் தெரு சந்து | 0.100 | 4.00 | 8.80 |
| 6 | மேலகொத்த தெரு | 0.265 | 4.20 | 30.00 |
| | ஈ.வி.எஸ். நகர் | 0.250 | 4.50 | 12.50 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | விருப்பாட்சி நடப்பு தெரு முதல் கேக்கரை வரை | 1.275 | 6.00 | 167.00 | | |
| | மருதப்பாடி | 0.305 | 4.00 | 26.30 | | |
| | காந்தி நகர் | 0.200 | 4.50 | 9.80 | | |
| 10 | விருப்பாட்சி நடப்பு தெரு | 0.243 | 5.00 | 25.80 | | |
| | காய்தே மில்லத் தெரு | 0.287 | 4.20 | 26.90 | | |
| 12 | தியாகி சத்தியமூர்த்தி தெரு | 0.170 | 4.00 | 14.80 | | |
| | கோவில் துரையான் சந்து | 0.055 | 4.00 | 4.90 | | |
| | அண்ணா சதுக்கம் | 0.113 | 4.00 | 9.80 | | |
| 13 | கானியாளர் தெரு | 0.095 | 4.00 | 8.60 | | |
| | பிடாரி கோவில் தெரு | 0.460 | 4.20 | 45.70 | | |
| 16 | முனிசிபல் பேட்டை | 0.172 | 4.00 | 15.00 | | |
| | பழைய மருத்துவமனை ரோடு | 0.387 | 4.20 | 36.50 | | |
| 20 | கணபதி பிள்ளையார் சந்து | 0.105 | 2.40 | 6.70 | | |
| | சீராத்தோப்பு 1 | 0.175 | 2.20 | 10.80 | | |
| | சீராத்தோப்பு 2 | 0.367 | 2.20 | 22.50 | | |
| | நெய்விளக்குதோப்பு | 0.550 | 6.50 | 38.00 | | |
| 21 | தியாகி சாரங்கப்பாணி தெரு(தெற்கு தெரு) | 0.248 | 4.20 | 23.30 | | |
| | நெய்விளக்கதோப்பு (அண்ணா காலனி) | 0.250 | 4.00 | 21.80 | | |
| | வசம்போடைத் தெரு | 0.195 | 3.00 | 14.00 | | |
| | வசம்போடைத் தெரு சந்து | 0.080 | 3.00 | 5.80 | | |
| | தியாகி சின்னச்சாமி தெரு | 0.172 | 3.00 | 12.30 | | |
| | தியாகி சாரங்கப்பாணி தெரு | 0.100 | 3.00 | 7.20 | | |
| 22 | வண்டிக்கார தெரு | 0.287 | 5.00 | 15.60 | | |
| | தியாகராஜபுரம் அஹ்ரகாரம் | 0.180 | 4.00 | 15.80 | | |
| | கிடாரம்கொண்டான் முடுக்கு தெரு | 0.318 | 4.00 | 27.40 | | |
| 25 | மஜித் தோப்பு | 0.185 | 4.00 | 16.10 | | |
| | சிவன் கோவில் தெரு | 0.100 | 4.00 | 8.60 | | |
| | புள்ள தெரு | 0.090 | 3.00 | 6.60 | | |
| 27 | ஐ.பி கோவில் தெரு ஆத்தா குளம் | 0.148 | 4.00 | 13.10 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஐ.பி கோவில் வடக்கு தெரு சந்து | 0.094 | 3.80 | 7.80 | |
| 28 | சந்தைப்பேட்டை | 0.40 | 4.00 | 3.60 | |
| | அண்ணா சாலை சந்து | 0.100 | 4.00 | 8.60 | |
| | ஜுப்ளி மார்கெட் | 0.105 | 4.00 | 9.20 | |
| | பழைய பேருந்து நிலைய சாலை | 0.330 | 23.00 | 125.70 | |
| | **மொத்தம்** | **10.142** | | **1000.00** | |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு முழுமானியமாக பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2951/2021/இ1

| | |
|---|---|
| பொருள் எண் 05<br>திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள பணியாளர்கள் உபயோகப்படுத்தி வரும் கழிவறைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை சீர்செய்யும் மற்றும் கழிவறையில் உள்ள வெளிப்புறப் பாதையினை பேவர்பிளாக் தரைத்தளமாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2021/இ1 | 279) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 06<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையமான அம்மையப்பனில் இயங்கி வரும் ஜெனரேட்டர் அறையானது மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. அதனை சீர்செய்துதர கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படித இடமானது ஆணையர் மற்றும் பொறியாளர் நேரில் ஸ்தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர் அறை மிகவும் அவசியமானதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சயின் வருவாய் நிதியிலிருநிது மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1521/2021/இ1 | 280) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 07<br>திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018-19-ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பேட்டரியால் இயங்கும் வாகனம் BOV 24 எண்ணிக்கையில் புதிதாக வழங்கப்பட்டது. மேற்படி வாகனங்களின் மூலம் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்பொழுது வாகனங்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைவிகிதம் கண்டறிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு | 281) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பழுதுதான வாகனத்தின் விவரம் | வாகனங்களின் எண்ணிக்கை | RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES (RS) | SRI POWER ELCTONICS (RS) | ESSAR AGENCIES (RS) |
|---|---|---|---|---|---|
| 1 | பேட்டரியால் இயங்கும் வாகனம் BOV (Battary Operated Vechiles) | 4 | 499232/- | 540000/- | 559500/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES KUMBAKONAM** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : - 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-படி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று **RISHI MOTORS RISHI GROUP OF COMPANIES** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2935/2021/எச்1

---

பொருள் எண் 08

எதிர்வரும் நகர்புற சாதாரண உள்ளாட்சி தேர்தலுக்கு வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர் , மின்சாரம், கழிப்பறை மற்றும் இதர அடிப்படை வசதிகள் , தேர்தலுக்கு தேவையான படிவங்கள் , வாக்குச்சாவடி பட்டியல் , வாக்காளர் பட்டியல், வார்டு மற்றும் மண்டல வரைபடங்கள் வாக்கு எண்ணும் மையம் வரைபடங்கள் , வாக்கு எண்ணும் மையத்தில் தடுப்புகள் அமைத்தல் , வாக்குச்சாவடி மற்றும் வாக்கு எண்ணும் இடத்தில் வீடியோ எடுத்தல் , தேர்தல் நடத்தும் அலுவலர் ,உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் , மண்டல அலுவலர்கள் , மண்டல உதவியாளர்கள் , வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் இதர நிர்வாக செலவினங்கள் ஆகியவற்றிற்காக ரூ.40 இலட்சம் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் 1560/2021/எப்1

282) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

---

பொருள் எண் 09

திருவாரூர் நகராட்சியின் நகர்மன்ற தேர்தலுக்கு 30 வார்டுகளுக்கான வாக்குச்சாவடி வரைவுப்பட்டியல் தயார் செய்யப்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 09.11.2021 தேதிய செயல்முறையின்படி ஒப்புதல் பெறப்பட்டு 10.11.2021 அன்று நகராட்சி அலுவலகம் மற்றும் அனைத்து வார்டுகளிலும் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் பொதுமக்களின் பார்வைக்கு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு விளம்பரம் செய்யப்பட்ட வரைவு வாக்குச்சாவடி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண் 1560/2021/எப்1

283) அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.

---

பொருள் எண் 10

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN50-E-2361 க்கு பேட்டரி பழுதடைந்து உபயோகபடுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட வாகனத்திற்கு பேட்டரி ஒன்று சப்ளை செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் விற்பனையாளர்களிடமிருந்து விலைவிகிதம் கண்டறிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

284) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

| வ.எண் | வாகன எண் | விபரம் | ஸ்ரீ கிருஷ்ணா பேட்டரி ஒர்க்ஸ் | ஹைடெக் பவர் கன்ட்ரோல் | கணேஷ் என்டர்பிரைசஸ் |
|---|---|---|---|---|---|
| 1 | TN50-E-2361 | பேட்டரி சப்ளை செய்தல் | 8300/- | 8700/- | 9000/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா பேட்டரி ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து பேட்டரி வாங்கவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி அலுவலரின் முன் அனுமதி பெற்று **ஸ்ரீ கிருஷ்ணா பேட்டரி ஒர்க்ஸ்** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை ரூ.8300/- வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2722/ 2021/எச்1

பொருள் எண் 11

285) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN50-M-0270 டிப்பர்லாரிக்கு பேட்டரி பழுதடைந்து உபயோகபடுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட வாகனத்திற்கு பேட்டரி ஒன்று சப்ளை செய்வதற்கு உள்ளூர் விற்பனையாளர்களிடமிருந்து விலைவிகிதம் கண்டறிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | வாகன எண் | விபரம் | டே - நைட் மார்க்கெட்டிங் | இளையராஜா ஆட்டோ எலெக்ட்ரிகல் பேட்டரி ஒர்க்ஸ் | கணேஷ் என்டர்பிரைசஸ் |
|---|---|---|---|---|---|
| 1 | TN50-M-0270 | பேட்டரி சப்ளை செய்தல் | 9000/- | 11500/- | 11000/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள டே - நைட் மார்க்கெட்டிங் என்ற நிறுவனத்திடம் பேட்டரி வாங்கவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி அலுவலரின் முன் அனுமதி பெற்று இளையராஜா ஆட்டோ எலெக்ட்ரிகல் பேட்டரி ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை. **ரூ**.9000/- வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2872/ 2021/எச்1

பொருள் எண் 12

286) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN50-L-2542 க்கு பேட்டரி பழுதடைந்து உபயோகபடுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட வாகனத்திற்கு பேட்டரி

<table>
<tr>
<td>
ஒன்று சப்ளை செய்வதற்கு உள்ளூர் விற்பனையாளர்களிடமிருந்து விலைவிகிதம் கண்டறிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>வாகன எண்</th><th>விபரம்</th><th>இளையராஜா ஆட்டோ எலெக்ட்ரிகல் பேட்டரி ஒர்க்ஸ்</th><th>கார்த்தி பேட்டரி ஒர்க்ஸ்</th><th>ஸ்ரீ குரு முருகன் பேட்டரி ஒர்க்ஸ்</th></tr>
<tr><td>1</td><td>TN50-L-2542</td><td>பேட்டரி சப்ளை செய்தல்</td><td>7000/-</td><td>8000/-</td><td>7600/-</td></tr>
</table>
மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள இளையராஜா ஆட்டோ எலெக்ட்ரிகல் பேட்டரி ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு : -<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இளையராஜா ஆட்டோ எலெக்ட்ரிகல் பேட்டரி ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை ரூ.7000/- வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண் 2756/ 2021/எச்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>
பொருள் எண் 13<br>
இந்நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2021 மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்
</td>
<td>287) அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
</table>

சு.பிரபாகரன்,

இடம் : திருவாரூர்

நாள் : **29.10.2021**

**ஆணையர் / தனிஅலுவலர்**
**திருவாரூர் நகராட்சி.**